மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பெஞ்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர் இதைப்போன்ற கேள்விகளைக் கேட்கிறார்கள். அங்கு உற்பத்தியாகக்கூடிய பூக்களினுடைய கொள்முதலுக்கு ஏற்ப, அங்கே புதிய வாசனை திரவியத் தொழிற்சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின், அங்கே புதிய தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க முன்வரும்பட்சத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று விதிகளுக்குட்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

30—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம்

***35571—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கென மேட்டுப்பாளையம் வட்டம், சிக்கதாசம்பாளையம் கிராமம், தீர்வை ஏற்பட்ட தரிசு நிலம் புல எண் 522–ல் 1.53 ஹெக்டேர் மொத்தப் பரப்பளவு கொண்ட நிலத்தில் 0.48.5 ஹெக்டேர் நிலம் போக்குவரத்துத் துறைக்கு நில

2021 பிப்ரவரி 25]

மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்படி அலுவலகத்திற்கு ஓட்டுநர் தேர்வு தளத்துடன்கூடிய சொந்தக் கட்டடம் கட்டுவதற்கென, 2019—2020 ஆம் நிதியாண்டில் ரூ.379.27 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டு, தற்போது பொதுப் பணித் துறையினரால் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.

திரு. அ. ராமு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்கி, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். இன்றையதினம் பட்டி தொட்டி மட்டுமல்ல; அனைத்துத் தரப்பு மக்களும் அம்மா அவர்களுடைய அரசை புகழ் பாடிக் கொண்டிருக்கின்ற வகையில் வழிநடத்துகின்ற சேலத்துத் தங்கம், கொங்கு நாட்டுச் சிங்கம், விவசாயிகளுடைய நிலை அறிந்த உற்ற நண்பன், தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன். அவருக்கு உறுதுணையாகச் செயல்படும் அண்ணன் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஓ.பி.எஸ். அவர்களையும், எங்கள் கோவை மாவட்டத்துத் தங்கம் உள்ளாட்சித் துறை அமைச்சர், அண்ணன் மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களையும் வணங்கி, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களையும் வணங்குகிறேன்.

முற்பகல் 11—10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோத்தகிரி தாலுகா, கோத்தகிரி அரசுப் பேருந்து பணிமனை வாடகைக் கட்டடத்தில் தற்போது இயங்கி வருகிறது. மாண்புமிகு அம்மாவின் அரசால் தற்போது இதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. அங்கு உடனடியாக கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்வியாக இருக்கிறது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர், அந்தப் பகுதியில் பணிமனை அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். அந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அங்கு தேவையான அளவிற்கு பேருந்துகள் இருக்குமாயின், புதிய பணிமனை அமைப்பதற்கு பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் பணியிலிருந்து ஓய்வுபெறும் வயதை 60 ஆக உயர்த்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 110—ன்கீழ் அறிக்கை. பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் பணியிலிருந்து ஓய்வுபெறும் வயதை 58—லிருந்து 59 ஆக உயர்த்தி, கடந்த ஆண்டு மே மாதம் எனது உத்தரவின்பேரில் அரசாணை வெளியிடப்பட்டது. அரசுப் பணியாளர்களின் ஓய்வு பெறும் வயது தற்போது அமலில் உள்ள 59 வயது என்பது 60 வயதாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உத்தரவு அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள், அரசமைப்பு மற்றும் சட்டரீதியான அமைப்புகள், அரசு நிறுவனங்கள்,